VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published 1-7th (1st Week) Every Month






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To — Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி
## செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்:4 | இதழ்:6 | மார்ச் : 2020 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
| Volume:4 | Issue:6 | March : 2020 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |




## ANATHA PRETHA KAINKARYA TRUST
## அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 98402 43592, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



### ஸ்ரீ காஞ்சி
### மஹா ஸ்வாமிகளின் அருளுரை
### தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
### அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
### இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

Contributions can be sent to :
A/c Name : Anatha Pretha Kainkarya Trust
A/c No : 0917101048526 / IFC Code : CNRB0000917
K. JAYARAMAN, Trustee / Treasurer
No.3, Mullai Street, Balaji Nagar, Adambakkam, Chennai - 600 088.
Cell : 9840045776 / Email : jayaraman2212@gmail.com




# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்
மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

**வேதமந்திரம் - 6**

ஜகம் முழுவதும் ஆத்மனுக்காகவே

**ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் ப4வதி,**
**ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் ப4வதி**
**-ப்3ரஹதா3ரண்யக உபநிஷதம்.**

பொருள்:

ஓ மைத்ராயி, இந்தப் ப்ரபஞ்சத்தில் இருக்கக்கூடிய எந்தப் பொருட்களும் அந்தந்தப் பொருள்களின் ஸுகத்திற்காக இருக்காமல் ஆத்மனுடைய ஸுகத்திற்காகவே இருப்பதால் தான் நமக்குப் ப்ரியமாய் இருக்கிறது அல்லவா?

ஒவ்வொரு மனிதனும் அனேக பொருள்களை விரும்புகிறான். கணவன் மனைவியையும், மனைவி கணவனையும், பெற்றோர்கள் குழந்தைகளையும், குழந்தைகள் பெற்றோர்களையும் விரும்புவதைக் காண்கிறோம். இதே போல் மனிதன் பசு, வீடு, உறவினர்கள் என முதலியவைகளையும் விரும்புவதைப் பார்க்கிறோம். இவைகளை நாம் நமம் ஸுகத்திற்காகவே விரும்புகிறோமே தவிர அவைகக்காக அல்ல. ஆகையால் இந்த ஜகம் முழுவதும் ஆத்மனுக்காகவே இருக்கிறது.

ஆத்மாவே ஜகம்.

ஓம் சாந்தி:சாந்தி:சாந்தி:

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 4 இதழ்: 6
அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**சந்தா விவரம்**
வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500
சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**
**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**


## புத்தகத்தின் உள்ளே


ஒரு நிமிடம் உங்களோடு
மாசி மாத விஷேசங்கள்
அட்டைப்பட விளக்கம்
பிரதக்ஷிணம்
சுபாஷிதம்
தர்மத்தின் குரல்
பெற்றோர்களே கவனியுங்கள்
தெரிந்து கொள்வோம்
ஸ்ரீமத் பகவத்கீதை
புதுவைக்கிளையின்மார்கழி பஜனை
சிருங்கேரி மஹா சுவாமிகள்
ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு
பழமொழிகளும் உண்மையான அர்த்தங்களும்
வியக்கவைக்கும் எண்கள்
சந்த்யா வந்தன போட்டி 2020
குழந்தைகள் பகுதி
திருப்பாவை - திருவெம்பாவை போட்டி 2020
நல்லறமாய் ஒரு இல்லறம்



புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் பிரிண்ட்டீஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**




# ஒரு நிமிடம் உங்களோடு

மார்ச் மாதம் என்றாலே எல்லா பள்ளிகளிலும் தேர்வுகள் நடைபெற ஆரம்பித்துவிடும். ஒழுங்காக படிக்கும் குழந்தைகளுக்கும் சரி, ஓரளவு சுமாராக படிக்கும் குழந்தைகளுக்கும் சரி பரிட்சை என்று வந்துவிட்டால் அதுவரை இல்லாத பயம் எங்கிருந்தோ வந்து ஒட்டிக்கொள்ளும், குழந்தைகள் தங்களுடைய விளையாட்டையும், மற்ற விஷயங்களில் ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டு படிப்பில் அதிக கவனம் செலுத்தி படிக்க ஆரம்பித்துவிடுவார்கள். தங்களுடைய குழந்தைகள் அதிக மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என்று பெற்றோர்களும், பள்ளி ஆசிரியர்களும் அதிக அக்கரை எடுத்துக் கொண்டு அவர்களை வற்புருத்தி அதிக நேரம் படிக்கச் சொல்லி நெருக்கடி கொடுப்பார்கள். இப்படி படிக்கச் செய்வது நிச்சயம் பயன்தராது. மாறாக அது ஒருவித மன அழுத்தத்தை உருவாக்கும். மாணாக்கர்களுக்கு எப்படியும் நாம் அதிக அதிப்பெண்கள் பெற்று தேர்வாகி முதலிடம் பெறுவோம் என்ற மன உறுதி இருந்தாலும் மனதில் ஒருவித பயம் இருக்கும். இந்த நேரத்தில் அவர்களுடைய பெற்றோர்களும், பள்ளி ஆசிரியர்களும் அவர்களிடம் அன்பையும், ஆதரவையும் காட்டி அவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களுடைய மனதில் உள்ள பயத்தை போக்க வேண்டும். இது குழந்தைகளுக்கு ஒரு நல்ல நம்பிக்கையைக் கொடுக்கும்.

பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் படிப்பையோ அல்லது மற்ற திறன்களையோ அடுத்தவீட்டு குழந்தைகளுடன் ஒப்பிட்டு பேசக்கூடாது. குழந்தைகளுடன் தினமும் மாலையில் சிறிது நேரம் விளையாடிவிட்டு மனம்விட்டு பேச வேண்டும். அவர்கள் எதைச் செய்யக்கூடாது என்று தாங்கள் நினைக்கிறார்களோ அதைத் தாங்கள் செய்யாமல் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு டி.வியை பார்க்காதே என்று அவர்களிடம் கூறிவிட்டு தாங்கள் உட்கார்ந்து டி.வியில் சீரியல் அல்லது கிரிக்கெட் மேட்ச் பார்க்கக்கூடாது. விடியற்காலையில் அவர்கள் எழுப்பி படிக்கச் சொல்லிவிட்டு தாங்கள் படுத்து தூங்கக்கூடாது. தேர்வு காலத்தில் அவர்களுடைய உடல் நலத்தில்

கவனம் செலுத்த வேண்டும். ஆரோக்யமான உணவுகளை அவர்களுக்கு வழங்கவேண்டும். குழந்தைகளை தினமும் காலையும், மாலையும் தெய்வ ஸ்லோகம் சொல்லுதல், சந்த்யாவந்தனம் செய்தல் முதலிய தெய்வ ஆராதனத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும். அந்த தெய்வ பலமே அவர்களின் முயற்சிக்கு உறுதுணையாக இருந்து வெற்றியை தேடித்தரும் அதற்கு பகவான் அவர்களை அனுக்ரகிப்பார்.

"Youth are not useless but they are used less. They are not careless but are cared less". - Swami Chinmayananda.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

## மாசி பங்குனி மாத விசேஷங்கள்
**(மார்ச் 14.03.2020 முதல் ஏப்ரல் 13.04.2020 வரை)**

| | | |
|---|---|---|
| *14.03.2020* | சனிக்கிழமை | காரடையார் நோன்பு மாலை 5.25 முதல் 5.45 வரை |
| *17.03.2020* | செவ்வாய்கிழமை | சதுர்த்தி விரதம் |
| *18.03.2020* | புதன்கிழமை | சபரிமலை நடை அடைப்பு |
| *24.03.2020* | செவ்வாய்கிழமை | ஏகாதசி |
| *25.03.2020* | புதன்கிழமை | மயிலை கபாலிஸ்வரர் தேர் |
| *26.03.2020* | வியாழக்கிழமை | பிரதோஷம், மயிலை கபாலிஸ்வரர் 63 மூவர் - காஞ்சி ஸ்ரீ ஜெயந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| *28.03.2020* | சனிக்கிழமை | பங்குனி உத்திரம், ஹோலி பண்டிகை, பௌர்ணமி, சபரிமலை பங்குனி உத்திரம் ஆராட்டு |
| *29.03.2020* | ஞாயிற்றுக்கிழமை | சபரிமலை கொடி ஏற்றம் |
| *31.03.2020* | செவ்வாய்கிழமை | சங்கடஹர சதுர்த்தி |
| *07.04.2020* | செவ்வாய்கிழமை | ஏகாதசி, சபரிமலை நடை அடைப்பு |
| *09.04.2020* | வியாழக்கிழமை | பிரதோஷம் |
| *12.04.2020* | ஞாயிற்றுக்கிழமை | அம்மாவாசை |
| *13.04.2020* | திங்கட்கிழமை | தெலுங்கு வருஷம் பிறப்பு |



# அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஜெயந்தி

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், த்யாகராஜ ஸ்வாமிகள், மற்றும் ஸ்யாமா ஸாஸ்திரிகள் ஆகிய மூவரையும் "ஸங்கீத மும்மூர்த்திகள்" என்று அழைப்பார்கள். இம் மூவரும் பிறந்த ஊர் ""திருவாரூர்".

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள், திரு.இராமஸ்வாமி தீக்ஷிதருக்கும், சுப்புலக்ஷ்மி அமையாருக்கும் 1775 ஆம் ஆண்டு மன்மத ஆண்டு பங்குனி மாதம் 24ம் நாள் கிருத்திகை நக்ஷத்திரத்தில் மூத்த மகனாக பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும்.

வைதீஸ்வரன் கோயில் முத்துகுமாரசாமி வரப்பிரசாதத்தால் இவர் பிறந்ததால் இவருடைய பெற்றோர்கள் இவருக்கு "முத்துசாமி" என்று பெயர் சூட்டினார்கள். சிறு வயதிலேயே பக்திமானாக இருந்த இவர் தன் தந்தையிடமே காவ்யம், நாடகம், வ்யாகரணம், ஸங்கீதம் ஆகியவற்றைக் கற்றார். சிறுவயதிலேயே இவருக்கு திருமணம் ஆகிவிட்டது. இவருடைய தந்தையைப் போலவே இவரும் வேதம், மந்திரம் முதலான ஸாஸ்திரங்களில் வல்லவராகத் திகழ்ந்தார்.

சின்னையா முதலியார் ஆதரவோடு சென்னை மணலியில் வசித்துவந்த ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரை சிதம்பரநாத ஸ்வாமிகள் தன்னுடன் காசி யாத்திரைக்கு அழைத்துச் சென்று ஸ்ரீ வித்யா தீக்ஷை தந்து, மந்திர உபதேசம் செய்து வைத்தார். அங்கு ஹிந்துஸதானி ஸங்கீதம் கற்று தொடர்ந்து மந்திர ஜபம் தியானம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு அர்க்யம் கொடுப்பதற்காக கைகளால் ஜலத்தை எடுக்கும்போது "ஸ்ரீராமா" என்னும் மந்திரம் பதித்த ஒரு வீணை தட்டுப்பட்டது. அதை அவர் தன் குருநாதரிடம் காண்பித்த போது அவர் "இது தெய்வமே உனக்கு அளித்த தெய்வ வீணை இதை நீ திருத்தணிக்கு எடுத்துச்சென்று அங்கு முருகனை

உபாசனை செய்" என்று ஆணையிட்டார். குருவின் கட்டளையை ஏற்று திருத்தணி வந்த தீக்ஷிதர் "குருகுஹா" என்னும் நாமாவைச் சொல்லிக்கொண்டே மலை ஏறிக்கொண்டிருந்தபோது எதிரில் வந்த ஒரு முதியவர் "முத்துஸ்வாமி வாயைத்திற" என்று கூறி அவருடைய வாயில் கற்கண்டைப் போட்டுவிட்டு மறைந்துவிட்டார். வந்தது அந்த முருகனே என தீக்ஷிதர் உணர்ந்தவுடன் அவருடைய வாக்கிலிருந்து "ஸ்ரீநாதாதி குருகுஹோ ஜயதி" என்று நாதவாணி துள்ளி வந்தது. அன்று முதல் "குருகுஹா" என்னும் முத்திரையைப் பதித்து ஏராளமான கீர்த்தனைகளை இயற்றினார். திருத்தணியிலிருந்து காஞ்சிபுரம் சென்று அங்க ஸ்ரீ காமாட்க்ஷியையும், ஏகாம்பரரையும் பாடிவிட்டு சீர்காழி, சிதம்பரம் போன்ற ஏராளமான க்ஷேத்திரங்களுக்குச் சென்று கீர்த்தனைகளைப் பாடினார்.

குகன் திருவருளால் அழியா புகழ் பெற்றஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கி.பி. 1835 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகை அன்று தன் தம்பியிடமும், தன் சிஷ்யர்களிடமும் "இன்று சதுர்தசி, தேவிக்கு உகந்த நாள், எனவே நீங்கள் தேவியின் மீதான கீர்த்தனங்களைப் பாடுங்கள்" என்று கூறினார். சிஷ்யர்கள் "மீனாக்ஷி மேதமும் தேஹி" என்று பாட அனுபல்லவியில் "மீனலோசனி பாசமோசனி" என்னும் கீர்த்தனையை கண்களை மூடி பாடிக்கொண்டே "சிவேபாஹி, சிவேபாஹி" என்னும் நாமாவை சொல்லிக்கொண்டே வீட்டின் மாடத்தின் அன்ன லக்ஷ்மி முன் ஏற்றியிருந்த விளக்கின் ஜோதியோடு இரண்டறக் கலந்துவிட்டார். இவரது சமாதி எட்டயபுரத்தில் அமைந்துள்ளது. இதை ஊரில் வருடா வருடம் இவருடைய ஜெயந்தி மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இந்த வருடம் இவருடைய ஜயந்தி 28.03.2020 சனிக்கிழமை நிகழவுள்ளது. அன்றைய தினம் அவருடைய சங்கீதத்திற்கு தலைவணங்கி அவரை நினைவு கூர்வோமாக.

தொகுப்பு **டி.சூரியநாராயணன்**



# சுபாஷிதம் - 14

**"சுபாஷிதம்"** என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**யதா ஹி ஏகேன சக்ரேண ந ரதஸ்ய கதிர்பவேத்**
**ஏவம் புருஷகாரேண வினா தைவம் ந ஸித்யதி**

ரதம் இயங்க ஒற்றைச் சக்கரம் உதவாது; அதுபோல மனித யத்தனம் ஏதுமின்றி அதிர்ஷ்டத்தால் தனியே எதையும் சாதிக்க இயலாது.

**ந பூத்பூர்வ ந கதாபி வார்த்தா ஹேம்ன: குரங்கோ ந**
**கதாபி த்ருஷ்ட: ததாபி த்ருஷ்ணா ரகுநந்தனஸ்ய**
**வினாஷகாலே விபரீத புத்தி:**

முன் ஒருபோதும் நிகழ்ந்ததோ, யாரும் கேட்டதோ, பார்த்ததோ இல்லை; இருந்து ஸ்ரீமான் பொன்மானைத் தேடிச் சென்றான். அழிவுகாலம் நெருங்கும் போது அறிவு துலங்காது.

**குரும் வா பாலவ்ருத்தௌ வா ப்ராஹ்மணம் வா பஹுஷ்ருதம்**
**ஆததாயினமாயாந்தம் ஹன்யாதேவா விசாரயான்**

குருவானாலும், குழந்தையானாலும், முதியவனானாலும், அந்தணனானாலும், தேர்ந்த அறிஞனானாலும் அவன் ஒரு தீவிரவாதியானால், மாற்று சிந்தனையுறாமல் கொல்லப்பட வேண்டும்.

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர
நிதிஉதவி செய்து வருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

தொகுப்பு : **பரிதி**

# தெரிந்துகொள்வோம்

1. வாலியின் தந்தை யார்?
2. பூலோக கைலாயம் எனப்படும் இடம் எது?
3. சத்தியம் தவறியதால் பார்வை இழந்த சிவனின் நண்பர் யார்?
4. தேவரிஷி என போற்றப்படும் முனிவர் யார்?
5. தென் இந்தியாவில் ஆண் நதியாகக் கருதப்படும் நதி எது?
6. அஜமுகி என்னும் ஆட்டுத்தலை அரக்கி யார்?
7. வட மாநிலங்களில் அனுமனின் பெயர் என்ன?
8. ஹனுமன் சாலிசா பாடியது யார்?
9. பசுதி என அழைக்க காரணம் என்ன?
10. பஞ்சபூத ஸ்தலங்களில் நீருக்குரிய கோயில் எங்குள்ளது?

தொகுப்பு : பரிதி

விடை 35ம் பக்கம்.

## யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

**நாள்: 03.05.2020, ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்: காலை 9.30 மணிமுதல் மாலை 3.30 மணிவரை**

**விளையாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி கருத்தரங்கம்**

**12 வயதுக்கு மேல் உள்ள திருமணமாகாத அந்தண பெண் குழந்தைகள் கலந்து கொள்ளலாம்.**

விளையாட்டுப்போட்டி : பாண்டி, தாயம், பல்லாங்குழி, பரமபதம்

பேச்சுப் போட்டி :
- என் குடும்ப பெருமை
- நட்புக்கும் உறவிற்கும் ஆன புரிதல்
- குல தெய்வம் வழிபாடு

சிறப்பு அழைப்பாளர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு ஆசியுரை வழங்க உள்ளார்கள்.

பரிசுகள், பாராட்டுகள், வாழ்த்துக்கள் பெற அன்புடன் அழைக்கிறோம்.

முன்பதிவு அவசியம்

சக்தி வேதபாரதி
புதுவை

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**



## பிரதக்ஷிணம்

"வேதபாரதி செய்திகள்" வாசகர்களை மார்ச் 2020 முதல் சிறு உருவம் கொண்ட எறும்பு முதல் பெரிய உருவம் கொண்ட யானை வரை பலவித மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் என பல உயிரினங்கள் இறைவனை வழிபட்ட கோயில்களுக்கு **"பிரதக்ஷிணம்"** வைக்க அழைத்துச் செல்கிறோம். சென்ற மாதம் எறும்புகள் இறைவனை வழிபட்டு முக்தி அடைந்த "திரு ஈங்கோய் மலை" கோயிலுக்கு அழைத்துச் சென்றோம். இந்த மாதம் **"நண்டு"** வழிபட்ட ஒரு ஸ்தலத்தில் பிரதிக்ஷிணம் வைக்கவிருக்கிறோம்.

### பிரதிக்ஷிணம் - 16

**"நண்டு" வழிபட்ட ஸ்தலம் திருந்துதேவன்குடி கோயில்**



இந்த மாதம் வாசகர்களை பிரதிக்ஷிணம் வைக்க அழைத்துப்போகவுள்ள ஆலயம் **"திருந்துதேவன்குடி"** சிவன் ஆலயம்

ஒரு சமயம் துர்வாச மஹரிஷி சிவபெருமானுக்கு பூஜை செய்து கொண்டிருந்தார். அவருடைய ஆஸ்ரமம் வழியாக சென்ற கந்தர்வன் ஒருவன் துர்வாசரின் முதிய தோற்றத்தைக் கண்டு அவரை பரிகாசம் செய்தான். அவர் அமைதியாக இருந்தார். ஆனால் அந்த கந்தர்வன் அவருடைய பூஜையை கலைககும் விதமாக துர்வாசரை கை தட்டி அழைத்தான். அதற்கும் அவர் அமைதியாக இருந்தார். கந்தர்வன் விடுவதாக இல்லை.உஉடனே அவன் நண்டு போல நடந்து காட்டி அவரை

மேலும் கேலி செய்தான். கோபம் கொண்ட துர்வாசர் அவனை நண்டாக பிறக்கும்படி சாபமிட்டார். வருந்திய கந்தர்வன் அவரிடம் சாபவிமோசனம் கேட்டான். அவனை மன்னித்த துர்வாசர் அவனிடம் "நீ சிவனை பூஜை செய்து வழிபட்டால் விமோசனம் கிடைக்கும்" என்றார். அதன்படி நண்டு வடிவில் இருந்த அந்த கந்தர்வன் இந்த **"திருந்துதேவன்குடி"** வந்தான். சிவன் சுயம்புலிங்கமாக எழுந்தருளியிருப்பதைக் கண்டான். அவன் தினமும் இரவில் புஷ்கரணியிலிருந்து தாமரை மலர் ஒன்றை பறித்து ஈசனுக்கு சாத்தி வழிபட்டுவந்தான்.

இதனிடையே, அசுரர்களை அழிக்கும் சக்தியை வேண்டிய இந்திரன் தன் கருவின் ஆலோசனைப்படி இந்த ஸ்தலத்திற்கு வந்து தினமும் விடியற்காலையில் ஆலய புஷ்கரணியிலிருந்து 1008 தாமரை மலர்களை பறித்து சிவனுக்கு சூட்டி வழிபட நினைத்தான். அவன் சிவன் சன்னதிக்குச் சென்ற போது சிவனுக்கு தாமரை மலர் ஒன்று சூட்டப்பட்டிருப்பதைக் கண்டு அதைக் கண்காணித்து வந்தான். ஒரு நாள் இரவு ஒரு நண்டு புஷ்கரணிக்கு வந்து ஒரு தாமரை மலரைப் பறித்து கோமுகம் வழியே சென்று சிவனின் பாணத்தின் மீது மலரை வைப்பதைப் பார்த்தான். தான் பூஜை செய்யும் லிங்கத்தை பூஜிக்கும் தகுதி பிறருக்கு கிடையாது என ஆணவம் கொண்டு, நண்டு ஈசனின் பாணத்தின் மீது ஏறும்போது அதைத் தன்னுடைய வாளால் வெட்ட முயன்றறன். அது சிவனின் நெற்றியில் விழுந்தது. கோபம் கொண்ட சிநவன் தன்னுடைய பாணத்தின் மீது ஒரு துளை ஏற்படுத்திக் கொடுக்கவே நண்டாக இருந்த கந்தர்வன் அதற்குள் புகுந்து விமோசனம் பெற்றான். தவறை உணர்ந்த இந்திரன் சிவனிடம் மன்னிப்பு வேண்டினான். சிவன் அவனை **மன்னித்து "ஆணவத்துடன் இருப்பவர்களால் ஒரு செயலிலும் வெற்றி பெற முடியாது. பணிவு குணமே நன்மை தரும்"** என்று அறிவுறுத்தி காட்சி தந்தார். இந்திரன் தன் தவறை உணர்ந்து திருந்தியதால் இத்தலத்திற்கு **"திருந்துதேவன்குடி"** என்று பெயர் ஏற்பட்டது. **"கற்கடம்"** என்றால் **"நண்டு"** நண்டின் பூஜைக்கு மகிழ்ந்த ஈசன் அதன் சாபத்தை நீக்கி விமோசனம் தந்ததால் இங்கு சிவன் ''கற்கடேஸ்வரர்'' என்று அழைக்கப்படுகிறார்.

''திருந்துதேவன்குடி'' எனும் பெயர் உடைய ஊர் தற்போது இல்லை. கோயில் மட்டுமே உள்ளது. கோவிலைச் சுற்றி



நான்கு புறமும் நெல் வயல்கள் சூழ அமைந்துள்ளன. இப்பகுதி மக்கள் இந்தக்கோவிலை **"நண்டு கோயில்", " நண்டான் கோவில்"** என்றுதான் சொல்கிறார்கள். இத்தல விநாயகர் ''கற்கடக விநாயகர்'' என்ற திருநாமதுதடன் அருள்பாளிக்கிறார். மூலஸ்தானத்தில் சிவன் கற்கடேஸ்வரர் கிழக்கு நோக்கி சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். கற்கடேஸ்வரர் திருமேனியில் வெட்டுத் தழும்புகள் இருப்பதை இன்றும் காணலாம். பாணலிங்கத்தின் உச்சியில் ஒரு துவாரம் உள்ளது. ஆடி அமாவாசையும், பூரநட்க்ஷத்திரமும் கூடிய நேரத்தில் 21 கடம் காராம் பசும் பாலைக் கொண்டு இரவில் அபிஷேகம் செய்தால் அந்த துவாத்திலிருந்து பொன் நிற நண்டு ஒன்று வந்து காட்சி அளிக்கும் என்று **''வசிஷ்டமஹாத்மம்யம்''** நூலில் கூறப்பட்டுள்ளது. 06.02.2003 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் முதல் நாள் யாக பூஜையின்போது யாக குண்டத்தை ஒரு நண்டு வலம் வந்த அதிசயமும் கூறப்பட்டுள்ளது.

அம்பாளுக்கு **"அருமருந்தம்மை" "அபூர்வநாயகி"** என இரு திருநாமங்கள் உண்டு. உட்பிரகாரத்தில் கணபதி, மருகர்,கஜலக்ஷ்மி, தந்வந்திரி, அகஸ்தியர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை ஆகியோருக்கு தனித்தனி சந்நிதிகள் உள்ளன. நண்டு சிவனை பூஜிக்கும் சிறப்மும் ஒரு கற்தூணில் செதுக்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம்.

மயிலாடுதுறையிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் பேருந்தில் செல்லலாம். திருவிசைநல்லூரிலிருந்து ஆட்டோவிலோ அல்லது நடந்தோ செல்லலாம்.

கோவில் காலை 8.30 மணி முதல் மாலை 6.30 வரை திறந்திருக்கும். கடக ராசிகாரர்கள் (புனர்பூசம், பூசம், ஆயில்யம் நட்க்ஷத்திரத்தில் பிறந்தவர்கள்) இந்த கோவிலுக்கு வந்து வழிபட்டால் அனைத்து தோஷங்களும் நீங்கும் என்பது ஐதீகம். தேவர்களின் வைத்தியரான தன்வந்திரிக்கும் ஒரு சந்நிதி இருப்பது குறிப்பிடத்தக்கது.

கோவில் முகவரி :
**அருள்மிகு கற்கடேஸ்வரர் திருக்கோவில்**
நண்டாங்கோவில், திருந்துதேவன்குடி,
திருவிசைநல்லூர் அஞ்சல், கும்பகோணம் வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம் - 612 105

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 2 : மறுபிறப்பு
### 2.14-13. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

எவ்வளவு உறுதியுடனும் விடாமுயற்சியுடனும் அதைச் செய்கிறோமோ, அந்த அளவுக்குக் கெட்ட ஸம்ஸ்காரத்தை மாற்ற முடியும். அதாவது, மனம், உலக விஷயங்களை நோக்கி நழுவிச் சென்றாலும், அதன் பாதையை மாற்ற முயற்சி செய்ய முடியும். முற்சி செய்ய வேண்டும். எனவே, தெய்வீக விஷயங்களை மட்டும் படிப்பதும் கேட்பதும் ஆன வழக்கத்தை, நாம் வலுக்கட்டாயமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். தெய்வீக மகான்களுடன் தான், சகவாசம் வைத்துக் கொள்ள வேண்டும். ப்ராரப்தத்தையும் மீறி, இந் முயற்சி இங்கேயே இப்பொழுதே செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் சாஸ்திரம் சொல்கிறது, இத்தகைய முயற்சியை நாம் எடுக்காவிட்டால், நாம் உலகவிஷயங்களில் மேலும் மேலும் மூழ்கி மேலும் மேலும் பாபங்களைச் செய்து, மேலும் மேலும் துக்கத்தில் வீழ்வோம்.

*14. "உலக விஷயங்களில் மூழ்கியுள்ள ஒருவன், முன்னேறும் முறை என்ன?*

ஒவ்வொருவருமே நாளாவட்டத்தில் தான் முன்னேற முடியும். உலக விஷயங்களுக்கு அடிமையாகிவிட்ட ஒருவன், அவற்றில் மேலும் மேலும் ஈடுபடுகிறான். உலக விவகாரங்களில் தர்மமமான முறையில் அவனுக்கு சந்தோஷம் கிடைக்கவில்லையெனில், அதை அவன் மீறி, அதர்மத்தில் ஈடுபடுகிறான். இது மேலும் கெடுதலான ப்ராப்தத்திற்கு வழிகோறுகிறது. அதனால் பொறுக்க முடியாத துன்பத்தை விளைவிக்கிறது. இத் தன்பத்தீயில் சுட்டெடுக்கப்பட்ட அவன், இத்துன்பங்களுக்கெல்லாம் காரணம் உலகியல் நாட்டமே என்பதைத் தானாகவே உணர்ந்து கொள்கிறான். அதிலிருந்து விடுபட விரும்புகிறான். ஒரு சாதாரணப் பையனை, அவன் தவறு செய்யும் பொழுது பெரியோர்கள் கண்டிப்பார்கள். அவன் தன்னைத் திருத்திக் கொள்வான் அல்லது அவன் திருந்தாவிட்டால், அவனை அடித்துத் திருத்துவார்கள். இதைப் போன்றதே ஒருவன் தானாகவே உணர்ந்து உலகியல் விவகாரங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதும். ....தொடரும்




FORM IV

Statement about ownership and other particulars about newpaper VEDABHARATHI SEITHIGAL as required to be published under Sec. 19--D Sub sec (b) of the Press and Registration of Books Act read with Rule 8 of the Registration of New Papers ( Central Rules ) 1956

| | |
|---|---|
| 1 Place of publication | Chennai |
| 2 Periodicity of Publication | Monthly |
| 3 Printer's Name<br>Nationality<br>Address | R.Gowthama Sankar<br>Indian<br>Sabanayakam Printers,<br>No 39, Millers Road,Kilpauk<br>Chennai- 600 010. |
| 4 Publisher's name<br>Address | R.VENKATARAMAN<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |
| 5 Editor's Name<br>Nationality<br>Address | R.VENKATARAMAN<br>No. 31, Seshadripuram 7th Main Rd<br>Baby Nagar,<br>Velachery,<br>Chennai- 600 042 |
| 6 Name and Address of New paper and partners holding More than one percent of the total capital | VEDABHARATHI SEITHIGAL<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |

I,R.Venkataraman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Chennai - 600042 31-03-2020 ( Sd ) R.Venkataraman

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

## போற்றுகிறோம்



படத்தில் உள்ளவரைப் பார்த்தால் **“வேதபாரதி செய்திகள்”** வாசகர்களில் ஒரு சிலருக்கு இவர் யார் என்று தெரியாது. ஆனால் **“பெற்றோர்களே கவணியுங்கள்”** என்றதலைப்பைப் படித்தவுடன் அத்துணை வாசகர்களுக்கும் பளிச்சென்று தெரிந்துவிடும். இவர்தான் “வேதபாரதி செய்திகள்” பத்திரிகையில் குழந்தை வளர்ப்பு குறித்து “பெற்றோர்களே கவணியுங்கள்” என்றதலைப்பில் வெளிவரும் கட்டுரையின் ஆசிரியர் திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி” என்பது. ஆனால் பத்திரிகை உலகில் இவரைத் தெரியாதவர்களே இருக்க முடியாது. அதே போல் வேதபாரதி அமைப்பில் உள்ள உறுப்பினர்கள் அனைவருமே இவரை நன்கு அறிவார்கள்.

திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி அவர்கள் சிறு வயது முதலே கதைகள், கட்டுரைகள் எழுதுவதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். முதலில் ஆங்கிலத்தில் தான் எழுதத் தொடங்கினார். ஆங்கிலத்தில் சில நூல்கள் எழுதியுள்ளார். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு பல நூல்களை மொழி பெயர்த்துள்ளார். அதன் பின் தமிழில் எழுத ஆரம்பித்தார். அவர் ஒரு முறைகூறும்போது **“தமிழ்ப்பத்திரிகைகளில் என் எழுத்துக்கள் வரத் துவங்கிய பொழுது என் மனதில் எழுந்த மகிழ்ச்சியை விவரிக்க இயலாது”** என்று கூறியுள்ளார். தன்னை எழுத்துலகத்திற்கு எடுத்துக்காட்டிய தினமணி ஞாயிறுமணியை



நன்றியுடன் நினைவு கூறுகிறார்.

சிறுவர் இலக்கியம், நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள் என்று பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய பல கட்டுரைகள் புத்தகமாகவும் வெளிவந்துள்ளன. இவர் **“சிறுவர் இலக்கிய ரத்னா”, என்றஎழுத்தாளர்”, “எழுத்துச்சுடர்”, “அருள் வளர் நங்கை”** என்று பல விருதுகளைப் பெற்றுள்ளார். சாதனையாளர்கள் பலரையும் நேர்காணல் கண்டுள்ளார். வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். உலக நாடுகள் பலவற்றிற்கும சென்றுள்ளார்.

**“வேதபாரதி அமைப்பு”** பெண் குழந்தைகளுக்காக **“யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்”** என்றநிகழ்ச்சியை பல ஆண்டுகளாக நடத்திவருகிறது. இந்த நிகழ்ச்சிக்கு **திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி”** அவர்களும் **டாக்டர். ஷ்யாமா ஸ்வாமிநாதன்** அவர்களும் (இவரும் தற்போது வேதபாரதி செய்திகள் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வருகிறார்கள்) இரு தூண்களாக இருக்கிறார்கள்.

**“வேதபாரதி அமைப்பு”** நடத்தும் நிகழ்ச்சிகளின் விவரங்களையும், ஆன்மீக விஷயங்களையும் மக்களிடம் எடுத்து சொல்வதற்காக ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானித்து 2014 அக்டோபர் மாதம் முதல் வேறு ஒரு பத்திரிகையில் மாதாமாதம் 6 பக்கத்தில் வேதபாரதி அமைப்பின் செய்திகளை வெளியிட ஆரம்பித்தோம். அந்த புத்தகத்தில் குழந்தைகள் வளர்ப்பு குறித்து ஒரு தொடர் கட்டுரை வர வேண்டும் என்றநோக்கத்தில் **“திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி”** அவர்களிடம் எங்களுடைய விருப்பதை தெரிவித்தோம். அதை கேட்டதும் அவர்கள் இன்முகத்தோடு எங்களுடைய கோரிக்கையை ஏற்று 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் **”பேற்றோர்களே கவணியுங்கள்”** என்ற தலைப்பில் குழந்தைகள் வளர்ப்பு குறித்து கட்டுரையை எழுதி வருகிறார். இவர்களுடைய இந்த கட்டுரை **“வேதபாரதி செய்திகள்”** வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

2015 ஆம் வருடம் ஜனவரி மாதம் முதல் 2016 ஆம் ஆண்டு

ஆகஸ்ட் மாதம் வரையிலும் **"வேதபாரதி செய்திகள்"** புத்தகங்களில் வெளிவந்த இவருடைய கட்டுரைப் பகுதிகளை, ஆசிரியரின் அனுமதியுடன் **"பேற்றோர்களே கவனியுங்கள் - பாகம் -1"** என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக நவம்பர் 2018-ல் வேதபாரதி அமைப்பே வெளியிட்டது. இந்த புத்தகத்திற்கும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

கட்டுரை **"வேதபாரதி செய்திகள்"** புத்தகம் தற்போது மாதம் தோறும் 1000 பிரதிகளுக்கு மேல் வெளிவருகிறது என்றால் அதற்கு **"திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி"** அவர்கள் எழுதும் **"பேற்றோர்களே கவனியுங்கள்"** கட்டுரையும் ஒரு காரணம் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் தொடர்ந்து தம்முடைய படைப்புகளை **"வேதபாரதி செய்திகள்"** புத்தகத்தில் எழுத வேண்டும். இன்னும் சிறப்பான புத்தகங்களை வெளியிடவேண்டும். அதற்கு அவர்கள் நல்ல உடல் நலத்தோடு இருக்க எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறோம்.

ஆசிரியர்.

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

| ஸ்ரீ பாலசுப்பிரமணியன் | ஸ்ரீ நடராஜன் |
|---|---|
| 9442094380 | 9443103404 |



ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 11



உலகில் உள்ள உயர்ந்த சமய நூல்கள் எல்லாம் நேர் முகமாகவோ அல்லது மறை முகமாகவோ ஒரு மஹா வாக்கியத்திற்கு விளக்கமாக வந்து அமையும். ''தத்வமஸி'' என்னும் வாக்கியத்தைக் கொண்டு தான் பகவத் கீதையின் 18 அத்தியாயங்களும் ஆக்கப் பட்டிருக்கின்றன.

தத் + த்வம் + அஸி = தத்வமஸி

"த்வம்" = நீ

"தத்" = அதுவாக

"அஸி" = இருக்கிறார் = "நீ அதுவாக இருக்கிறாய்" என்பது இதன் பொருள். ஜீவாத்மாவாகிய மனிதன் பரமமாவாகிய மெய்பொருள்கு அன்னியமானவன் அல்ல என இதற்கு விளக்கம் வருகிறது.

(சபரிமலையில் 18 படிக்கட்டுக்களை ஏறியவுடன் நம் கண்களில் படும் வேத வாக்கியம் "தத்வமதி" என்பதாகும். மூலவராக காட்சி தரும் ஐயப்பனும் விரதம் இருந்து மலைக்கு வரும் பக்தனும் ஒன்றே. கடவுளும் உயிர்களும் வேறு வேறு இல்ல என்பதையே இந்த மஹாவாக்கியம் நமக்கு உணர்த்துகிறது)

"தத் + த்வம் + அஸி = "தத்வமஸி" என்ற மஹா வாக்கியத்திற்கு ஸ்ரீமத் பகவத் கீதை ஏற்றமிக உயர்ந்த விளக்கத்தை தருகிறது.

1) ''த்வம்'' = நீ பகவத் கீதையில் முதல் ஆறு அத்தியாயங்கள் ஜீவ தத்துவத்தை விவரமாக விளக்குகிறது. ஜீவனிடத்தில் (மனிதனிடத்தில்) உள்ள குறைபாடுகள், மனிதன்

எப்படி செயல் புரியவேண்டும், அந்த செயலோடு தொடர்பு எப்படி இருக்க வேண்டும்? அவன் அடைய வேண்டிய நிறை அதற்காக அவன் எடுக்க வேண்டிய முயற்சி என்பன விளக்கப்பட்டுள்ளன.

2) "தத்" = 'அது" இரண்டாவது ஆறு அத்தியாயங்களில் பரத்மாவைப் பற்றிய விளக்கங்கள். இறைவன் என்றால் என்ன? உலகம் அனைத்திலும் அவர் எப்படி அந்தராத்மாவாக இருக்கிறார்? உலகத்தைக் கடந்தவராகவும் எப்படி இருக்கிறார்? இறைவனிடத்தில் பேரன்பு செலுத்துவது எப்படி? ஈஸ்வர லட்க்ஷணம், ஈஸ்வர பக்தி முதலியன விளப்பட்டுள்ளது.

3) "அஸி" = இருக்கிறாய் கடைசி ஆறு அத்தியாயங்களில் இறவைனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு எத்தகையது என்பது பற்றியும், ஞானத்தைப் பற்றியும், ஜீவாத்மா பரமாத்மா இணக்கத்தைப்பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

மனிதனை ''நிறைமனிதன்'' ஆக்குவது கீதையின் கோட்பாடாகும்.

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**

## வேதபாரதி

### யுவன் யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

### ஆசிரியர்கள் பயிற்சி முகாம்

பதின்பருவ மாணவர், மாணவியருக்கு வாழ்வியல் பயிலரங்கம் நடத்திட ஆசிரியர் பயிற்சி முகாம் (இடம் : சென்னை), இரண்டு நாட்கள் (தேதி பின்னர் அறிவிக்கப்படும்) தங்குமிடம், உணவு ஏற்பாடு உண்டு. **குறிப்பு** : 25வயதிற்கு மேற்பட்ட 35 வயதிற்கு உட்பட்ட திருமணமான பெண்கள் கலந்து கொள்ளலாம். ஏதேனும் ஒரு கல்லூரி படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி இலவசம்**

பயிற்சி பெற்றவுடன் வகுப்பு நடத்துபவர்களுக்கு
போக்குவரத்து மற்றும் தகுந்த சனமானம் வழங்கப்படும்.

மேலும் தொடர்புக்கு
**போன்:9894736419, 9884031563**



## வேதபாரதி குத்தாலம் நிகழ்ச்சி

28.12.2019 சனிக்கிழமை மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை குத்தாலம் அருள்மிகு மிருது குகில குனாம்பிகை உடனுரை உத்தவேதீஸ்வரர் ஆலயத்தில், மழலைகளின் மனதில் ஈசனின் பதிகங்கள் என்ற தலைப்பில் பதிகம் பாடுதல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் அருளிய மின்னுமா மேகங்கள் என்ற தேவாரப் பாடல் 300 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 28.12.2019 மாலை 4.00 மணிக்கு 250க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொள்ள ஆலய வளாகத்திற்கும் குடியிருந்தார்கள். பாரம்பர்ய உடையில் குழந்தைகள் கலந்து கொண்டு நம் பெருமையை உணர்த்தினார்கள். விழாவில் திருச்சி சந்திரசேகர் கலந்து கொண்டு குழந்தைகளை வழி நடத்தினார்கள். மின்னும் மேகங்கள் பாடல் பாடி ஈசனின் பேரருல் பெற்றார்கள். நிகழ்ச்சியில் ஸ்ரீரமண பாரதி கலந்து கொண்டு பெற்றோர்களுக்கு நல் அறிவுரை சொல்லி வாழ்த்தினார்கள். கோவில் நிர்வாகம், ஸ்ரீ சேகர் சிவாச்சார்யார்கள் குழுவினர் மிகுந்த ஒத்துழைப்பு நழ்கினார்கள்.



ஆசிரியர் ஸ்ரீ நடராஜன் மிகுந்த சிரத்தையுடன் ஏற்பாடுகள் செய்திருந்து விழாவினை நடத்திக் கொடுத்தார்கள். பள்ளி தாளாளர் ஸ்ரீ பாண்டியன் ஒத்துழைப்பு நல்கி குழந்தைகள் மிக அதிக அளவில் பங்கு பெற்றார்கள். திருப்பூர் தொழிலதிபர் ஸ்ரீ ராமச்சந்திரன் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார்கள். எல்லா சிறார், சிறுமியர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஓம் நம: சிவாய.

ஆசிரியர்.


# வேதபாரதி - மாத்ரு வந்தனம்


ஹிந்து ஆன்மீக கண்காட்சியில் வேதபாரதிக்கு என்று ஒதுக்கப்பட்ட F 16, 17 ஆகிய ஸ்டால்களில் வேதபாரதி அன்பர்கள் தினசரி கலந்து கொண்டு வரும் பார்வையாளர்களுக்கு விளக்க அறிக்கை கொடுத்து பணியை சிறப்பாக செய்தார்கள். மேலும் இந்த ஆண்டு வேதபாரதி சௌபாக்யா ரமேஷ் தன்னுடைய முழு முயற்சியால் F 16 ஸ்டாலில் 30.01.2020 முதல் 03.02.2020 வரை ஹிந்துக்களின் முக்ய நிகழ்வாகிய மாத்ரு வந்தனம் நிகழ்ச்சியை சிறப்பாக திட்டமிட்டு பார்வையாளர்களின் பெற்றோர்களுக்கு அவர்கள் குழந்தைகளை பூஜை செய்விக்க சொல்லி, பெரியவர்கள் குழந்தைகளுக்கு ஆசிர்வாதம் வழங்கி சிறப்புச் செய்தார்கள்.

ஏராளமான பெற்றோர்களும், குழந்தைகளும கலந்து கொண்டு குழந்தை பூஜை செய்தவுடன் ஆசி வழங்கினார்கள். இந்நிகழ்ச்சிக்கு பெரும் வரவேற்பு பெற்றது. ஸ்ரீ புழுதிவாக்கம் நாராயணன் ஜி அவர்கள் விளம்பர உதவி செய்து நிகழ்ச்சியை ஊக்கப்படுத்தினார்கள்.

வேதபாரதி.







V.KRISHNAMOORTHY
Managing Trustee

20th Year of DEDICATED SELFLESS SERVICE

"No one ever becomes poor by giving charity; His soul becomes only richer and nobler..!"

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "**இலவச காப்பகம்**"

மனிதநேயமும், தர்ம சிந்தனையும் சங்கமிக்கும் இடம் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும், ஏழை புற்று நோயாளிகளின் புகலிடமான **நம்ம தர்மசாலா** என்றால் அது மிகையல்ல. ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்ற தாய்வீடு தங்களை அன்புடன் அரவணைத்து பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் ஏழை புற்று நோயாளிகள் வருகிறார்கள். ஏழை புற்றுநோயாளி களுக்காக தாங்கள் செய்யும் உதவி தவறாமல் அவர்களைச் சென்றடையும் என்கிற நல்ல எண்ணத்தில் நன்கொடை யாளர்கள் உதவி செய்கிறார்கள். இப்படி நம்பிக்கைக்கும், நல்லெண்ணத் திற்கும் பாலமாக இருபது வருஷங்களாக செயல்பட்டு வருவதை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் தன்னிறைவு கொள்கிறது. **இம்மாபெரும் தர்மத்தேரின் வடத்தை மனிதநேயம் மிக்க நீங்கள்தான் தளராமல் பிடித்திருக் கிறீர்கள்.** உலகில் புற்றுநோயும், ஏழ்மையும் இருக்கும்வரை இப்பணி தடையின்றி தொடர்ந்திட நீங்கள் உதவிட வேண்டும்.

**"நாம் தேடிச் செல்லும் அன்பைக் காட்டிலும் நம்மைத்தேடி வரும் அன்பு மிகவும் மகத்தானது"** என்பதை ஒவ்வொரு முறையும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கும் நமது வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய திருமதி "ஸ்ரீ குருக்ருபா" **வேதா மாமி** மற்றும் அவரது ஆன்மீக வாரிசாக உருவாகி யிருக்கும் சேவை உள்ளம் கொண்ட அன்புத்தோழியர்கள் வழக்கம் போல் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் **நம்ம தர்மசாலா**வில் தங்கியிருக்கும் ஏழை




புற்றுநோயாளிகளுக்கு பொங்கல் பண்டிகைப் பரிசாக தரமான புத்தாடை களை பெரும் பொருட்செலவில் வாங்கி நன்கொடையாக நம்மிடம்



வழங்கினர். அவர்களது சார்பில் நம்ம தர்மசாலாவில் தங்கியிருக்கும் ஏழை புற்றுநோயாளிகள் மற்றும் அவர்களுடன் தங்கியிருக்கும் ஒரு உறவினருக் கும் அந்த புத்தாடைகள் வழங்கப்பட்டது. இவர்களைப் போன்றவர்கள்தான் **"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"** என்ற வள்ளுவரின் வாக்கிற்கு உரித்தானவர்கள். எளியோரை அரவணைக்கும் இந்த நல்ல உள்ளங்களை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் பெருமிதம் கொள்கிறது. அவர் கள் நீடூழி நலமுடன் வாழ எங்களுடன் சேர்ந்து வாசகர்களா கிய நீங்களும் ப்ரார்த்தனை செய்யுங்களேன்...




நமது செயல் அறங்காவலர் **திரு.ஆகாஷ்ராம்** பொங்கல் புத்தாடைகளை ஏழை புற்றுநோயாளிகளுக்கு வழங்கி மகிழ்ந்தார்.

## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "நம்ம தர்மசாலா"வின் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.
**Account Name: SRI MATHA TRUST**
Bank Name: INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Next to Harini Skin & Laser Clinic] Adyar, Chennai-20. Tel: (044) 24420727 / 42661687
Mobile: 9444001065 / 9381020727 9003247857

Email: vkrishnamoorthy.smt@gmail.com Website: www.srimathatrust.org

| Namma Dharmasala: | Regd. Office: |
|---|---|
| 9, Yogi Garden, Sriram Nagar, Adjacent to IIT Compound, Chennai-113. Tel: 044 - 4509 8647 | 'NATHA KAMALAM' 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. |

ராஜலட்சுமி கல்யாண மண்டபம்
வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு
**48625585 / 9840545585**



# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## திருப்தி



தனக்குக் குழந்தை பாக்கியத்தை தந்தருளுமாறு ஒருவன் இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டான். கூடிய சீக்கிரமே அவன் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானான். அக்குழந்தை தாயிடம் பால் குடிக்க மறுத்தது. இதைக் கண்டு மனம் வருந்திய அப்பக்தன், மீண்டும் இறைவனிடம் சென்று, ''நீ எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தாய். ஆனால், அதற்கு பால் குடிக்கத் தெரியவில்லை. அது எங்ஙனம் உயிர் வாழப் போகிறது என்பதை நினைத்தால், எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. என் கஷ்டத்தைத் தீர்க்க நீதான் ஏதாவது செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். பக்தனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இறைவன், "அப்படியா? நாளை முதல் அது பால் குடிக்கும்; கவலைப்படாதே" என்று கூறியருளினார். குழந்தை பால் குடிக்க ஆரம்பித்ததும், அவனுடைய கஷ்டம் தீர்ந்தது. தாங்க முடியாத அளவிற்கு அதிகமாகிக் கொடே வந்தன.

மறுபடியும் பக்தன் இறைவனிடம் சென்றான். குழந்தையை எப்படியாது திருத்தி, சமர்த்தாக நடந்து கொள்ளச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான். இறைவனும், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். அத்தருணம் முதற்கொண்டு குழந்தை தனது குறுப்புகளையெல்லாம் நிறுத்திக் கொண்டது. நாளடைவில், அதனுடைய சுறுசுறுப்பெல்லாம் மறைந்தது. யாரிடமும் குழந்தை சரியாகப் பேசாமல் மௌனமாக இருந்தது. குழந்தையின் நிலைமையையெண்ணி அவன் உள்ளம் பதைபதைத்தது.

(தொடரும்)

## ஹிந்து ஆன்மீக கண்காட்சி 28.01.2020 முதல் 03.02.2020 வரை




*ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3 வரை இந்து ஆன்மீக கண்காட்சி வேளச்சேரி குருநானக் கல்லூரியில் வெகு விமரிசையாக நடைபெற்றது. 400 க்கும் மேற்பட்ட அரங்குகளில் ஹிந்து சமுதாய சேவை செய்யும் அமைப்புகள் தங்கள் ஸ்தாபனங்கள் செய்யும் பணிகளைப் பற்றிய விபரங்களை பொதுமக்களுக்கு விளக்கினார்கள். 15 லட்சம் மக்கள் வந்து பார்வையிட்டதாக ஊடக நண்பர்கள் சொல்கிறார்கள்.*

*கடந்த 10 வருடமாக வேதபாரதி அமைப்பு தொடர்ந்து ஹிந்து ஆன்மீக சேவைகள் செய்வதில் பங்கெடுத்துக் கொள்வதுடன் கண்காட்சி நிர்வாகத்திற்கும் ஒத்துழைப்பு நல்கி வருகிறோம். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் வேதபாரதி சார்பில் வேளச்சேரி தண்டீஸ்வர ஸ்வாமி கோவிலை மையமாக வைத்து வேளச்சேரியில் உள்ள கோவில்களையும், ஆதம்பாக்கம் பள்ளிககரணை, தரமணியில் உள்ள சேவார்த்திகள் 1008 பேரை ஒருங்கினைத்து 31.01.2020 அன்று மாலை குருநானக் கல்லூரி வளாகத்தில் அமைத்துள்ள ஆடிடோரியத்தில் ஸ்ரீ லலிதா சமஸ்ரநாம பாராயணமும், குங்கும அர்ச்சனையும் மிக விமர்சனையாக நடைபெற்றது.*





வேளச்சேரி ஸ்ரீ தண்டீஸ்வர ஸ்வாமி அம்பாளுடன் எழுந்தருளி அருள் பாலித்தார்கள். ஸ்ரீ குமாரசாமி சிவாச்சாரியார்கள் குழுவினர்கள் முன்னின்று விழா ஏற்பாடுகளை சிறப்புற நடத்தக் கொடுத்தார்கள். விழாவின் முத்தாய்பாக தேனி வேதபுரி ஸ்ரீ ஓங்காரனந்த மஹா ஸ்வாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்கள். வேதபாரதி அன்பர்களும் உழவாரப்பணி அன்பர்களும் விழாவினை ஏற்பாடுகள் செய்துகொடுத்தார்கள். ஆன்மீக கண்காட்சி நிர்வாகிகள் ஸ்ரீ குருமூர்த்தி சார், ஸ்ரீமதி ராஜலெட்சுமி, முன்னால் MD Dr.ஹர்ஷவர்த்தன் கலந்து கொண்டு வழிபாடு செய்து, ஸ்வாமி ஓம்காரனந்தா அவர்களிடமும் ஆசி பெற்றார்கள். இந்நிகழ்ச்சி நடக்க ஆரம்பம் முதல் திட்டமிட்டு நடத்திக் கொடுத்த ஸ்ரீ குமாரராஜா அவர்களை வேதபாரதி சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். ஆசிரியர்.

## “வேதாந்த பிரபோதம்” புத்தகம்

நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

தொடர்புக்கு : **9444445156 / 97909 20672**

## பழமொழிகளும் அவற்றுக்குண்டான உண்மையான அர்த்தங்களும்

பழமொழி என்பது ஒரு செயலுக்கு அல்லது செய்கைக்கு விளக்கம் தர சொல்லப்பட்டது. அந்தக்காலத்தில் சொல்லப்பட்ட பழமொழிக்குண்டான உண்மையான அர்த்தங்கள் நாளடைவில் மருவி தற்போது ஏதோ அர்த்தங்கள் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பழமொழிகளின் சரியான விளக்கங்கள் இந்தப்பகுதியில் தொடர்ந்து அளிக்கப்படும்.

**1. பந்திக்கு முந்திக்கொள், படைக்கு பிந்திக்கொள்**

**தற்போது கூறும் பொருள் :** பந்திக்கு முதலில் போய் உட்கார்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் உணவு நமக்கு முழுமையாக கிடைக்காது, போருக்கு செல்பவன் படைக்கு பின்னால் நின்று கொள்ள வேண்டும். அப்படி செய்தால், உயிருக்கு ஆபத்து வராது.

**உண்மையான பொருள்**

பந்திக்கு முந்து என்பது சாப்பிட போகும் போது நமது வலது கை எப்படி முன்னோக்கி செல்கிறதோ, அதே போல போரில், எவ்வளவு தூரம் வலதுகை வில்லின் நாணலை பிடித்து பின்னால் இழுக்கிறதோ, அந்த அளவுக்கு

**2. கல்லைக்கண்டா, நாயைக் காணோம்! நாயைக் கண்டா கல்லைக் காணோம்!!**

**தற்போது கூறும் பொருள் :** நாயைப் பார்க்கும் போதெல்லாம் அதை அடிக்க கல் அகப்படுவதில்லை. அதுபோல கல்லை காணும் போதும் அடிவாங்க நாய் சிக்குவதில்லை.

**உண்மையான பொருள்** கோவிலில் கால பைரவர் சன்னதியில் நாயின் சிலை செதுக்கப்பட்டிருக்கும். அதை கலை கண்ணொடு பார்த்தால், நாய் போல தெரியும்; வெறும் கல் என நினைத்தால் நாய் தெரியாமல் கல்தான் தெரியும். எந்த ஒரு செயலும் தெரிவது / செய்வது, அவரவர் பார்வையில் / செயலில் தான் உள்ளது.

**3. விருந்தும் மருந்தும் மூன்று நாள்!**

**தற்போது கூறும் பொருள் :** விருந்துக்கு சென்றால், மூன்று நாட்களுக்கு மேல் இருக்க கூடாது. மருந்து உட்கொண்டாலும் மூன்று நாட்களுக்கு மேல் உண்ண கூடாது. அது எந்த ஒரு தனி மனிதனையும் பாதிக்கும்.

**உண்மையான பொருள்**

ஒரு வாரத்தில் ஞாயிறு, திங்கள், புதன் ஆகிய நாட்களில் நன்றாக உணவு உட்கொள்ள வேண்டும். செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் உணவை குறைவாய் உட்கொண்டு மருந்து உண்ண வேண்டும்.

**- தொகுப்பு ஆதித்யன்**




# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



### இதிஹாஸங்களின் பெருமை

புராணங்களை வேதத்துக்கு உபாங்கமாகச் சொன்னால், இதிஹாஸங்களையோ வெதத்துக்கு ஸமானமாகவே உயர்த்திச் சொல்லியிருக்கிறது. ாரதத்தை "பஞ்சமோ வேத; - ஐந்தாவது வேதம் - என்று சொல்லியிருக்கிறது. ராமாயணத்தைப்பற்றி, "வேதத்தால் அறியத்தக்க பரம புருஷன் தசரதனின் குழந்தையாக அவதாரம் பண்ணியவுடன் அந்த வேதமும் வால்மீகியின் குழந்தையாக அவதாரம் பண்ணி விட்டது'' என்று சொல்லியிருக்கிறது.

**வேதவேத்யே பரே பும்ஸி**
**ஜாதே தசரதாத்மஜே!**
**வேத:ப்ராசேதஸாதாஸீத்**
**ஸாக்ஷாத் ராமாயணாத்மனா;**

(பிரசேதஸின் பிள்ளையானதால் வால்மீகிக்குப் பிராசேதஸ் என்று பெயர்)

ராமாயண - பாரதக் கதைகள் நம் தேச ஜனங்களின் சத்தத்திலேயே ஊறிப்போனவை.

இந்த இதிஹாஸ படனம், குறைந்து போய்விட்ட இந்த நாற்பது, ஐம்பது வருஷத்துக்கு முன்புவரை பாமர ஜனங்கள் உள்பட எல்லோருமே வெளி தேசத்தார். வியக்கும்படியான நல்லொழுக்கங்களோடு யோக்யமாக இருந்து வந்தார்கள் என்றால் அதற்கு முதல் காரணம் ராமாயணமும் பாரதமும்தான். பாரதப் பிரவசனம் விடாமல் ஒவ்வொரு ஊர்க் கோயிலிலும் நடக்க வேண்டும் என்பதற்காகத் தமிழ் ராஜாக்கள் மானியம் கொடுத்து வந்திருக்கிறார்கள். முப்பது, நாற்பது வருஷத்துக்கு



முந்தி வரையில் பூசாரி உடுக்கடித்துக் கொண்டு பாரதம் பாடுவதை கேட்கத்தான் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக போவார்கள். அதுதான் அவர்களுக்கு சினிமா, நாடகம் எல்லாம். ஆனால் ஸினிமா, டிராமாக்களினால் ஒழுக்கத்திற்கு எற்பட்டிருக்கிற ஹானிகள் இல்லாமல், பாரதக்கதை கேட்டுக் கேட்டே அவர்கள் ஸத்யத்துக்கு பயந்து கபடு, சூது இல்லாமல் நல்ல வாழ்க்கை நெறியில் போனார்கள். பாரதத்துக்கு இந்தத் தமிழ் தேசத்திலிருக்கிற மதிப்பு, கிராம தேவதை ஆலயத்தை, "திரௌபதை அம்மன் கோயில்'' என்று சொல்வதிலிருந்து தெரிகிறது.

ஒவ்வொரு பெரிய புராணத்தையும் எடுத்து கொண்டால் அதிலே தனித்தனிக் கதையாக அநேகம் இருக்கும். ஒவ்வொரு கதையும் ஒரு குறிப்பிட்ட தர்மத்தை வலியுறுத்துவதாக இருக்கும். இதிஹாஸத்திலோ ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ஒரே கதையாக இருக்கும். நடுவே வேறு பல உபாக்யானங்கள் வந்தாலும் கூட அலையும் பிரதானமான ஒரு கதையை சுற்றியே இருக்கும். புராணத்தில் ஒவ்வொரு கதை, ஒவ்வொரு தர்மத்தைச் சொல்கிறது என்றால் இதிஹாஸத்தின் மையமான கதையில் ஸகல தர்மங்களும் நடத்திக் காட்டப்பட்டிருக்கும். உதாரணமாக, தனிக்கதைகளான ஹரிச்சந்திர உபாக்யானம் ஸத்யம் என்ற ஒரு தர்மத்தை மட்டும் சொல்கிறது; நளாயினி கதை கற்பை மட்டும் சொல்கிறது; ரந்திதேவன் கதை பரமத் தியாகத்தை, கருணையை மாத்திரம் சொல்கிறது. ஆனால் ராமர், பஞ்ச பாண்டவர்கள் இவர்களுடைய வாழ்க்கையைச் சுற்றி அமைந்த இதிஹாஸங்களில் இவர்கள் ஸகல தர்மங்களையும் நடத்திக் காட்டுகிறார்கள்.

## வேதபாரதி - புதுவைகிளையின் ''மகர விளக்கு''

''விளக்கேற்றி சந்நிதியில் ஒளி பெருக்கி நம் வாழ்வில் ஒளி பெறுங்கள்'' என திருக்கோவில்களில் விளக்கேற்றுவதற்கு விளக்கம் தருவர் நம் பெரியோர்கள்.



விளக்கின் சுடருக்கும் ஒளிக்கும்தான் எத்தனை சக்தி! இதையுணர்ந்தே தீப வழிபாட்டிற்க முக்கியத்தவம் தந்தனர், அதிலும் கூட்டு வழிபாடு என்பது பெரும் பலனை தரவல்லது.

வேதபாரதியின் புதுவை கிளை திருவிளக்கு பூஜைக்கு ஏற்பாடு செய்து, தைமாதம் என்பதால் ''மகரவிளக்கு'' பூஜையாக கடந்த தை 19, 02.02.2020 ஞாயிற்றுக்கிழமை வழக்கம்போல --- சாலையிலுள்ள ''சங்கர வித்யாலயா'' பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

குடும்பத்தின் விருத்திகாகவும், க்ஷேமத்திற்காகவும் சங்கல்பம் செய்து நடைபெற்ற பூஜையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஸ்திரிகளும், கன்னியர்களும் பாரம்பரிய உடையில், மடிசார் மற்றும் பாவாடை தாவணி சகிதமாக கலந்து கொண்டனர்.

திருவிளக்கு பூஜையின் துவக்கமாக லலிதா சஹஸ்ரநாமம், லலிதா திரிசதி பாராயணமும், பூஜையும் நடைபெற்றது. லலிதா நவரத்னமாலை, கனகதார ஸ்தோத்திரடனும் பூஜை நிறைவு செய்து, அதன் வெற்றிக்களிப்பை கும்பி மற்றும்



கோலாட்டத்துடன் கொண்டாடினர்.

இடையே, சில மணித்துளிகள் தொழிலதிபர் கணேசன் அவர்கள் நமது பண்பாடு கலாச்சாரத்தை வலியுறுத்தியும் பெருமைப்படுத்தியும் பேசினார். இறைவழிபாட்டு பஜனையும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி பெண்களை ஒன்றிணைக்கும் ''சக்தி வேதபாரதி'' என்ற உட்பிரிவை துவக்குவதற்கு அடித்தலமாக அமைந்தது. அவர்களுக்கான ஒரு குழுவை ''வாட்ஸ் அப்பில்'' துவக்கி ஒருசில தினங்களிலேயே அக்குழு நிறைந்து வழிந்து வரவேற்படைந்துள்ளது.

தற்போது அந்த குழுவானது பெண்களுக்கான தனி நிகழ்ச்சிகளை தன்னிச்சையாக நடத்துமளவிற்கு தயாராகி வருகிறது என்பது பெருமை கொள்ளத்தக்கது. இக்குழுவிற்கு எப்போதும் போல புதுவை வேதபாரதி வழிகாட்டியாகவும், பக்கபலமாகவும் இருந்து வருகிறது.

இரவு 9 மணி வரை நடைபெற்ற ''மகரவிளக்கு'' நிகழ்ச்சி உணவுடன் சிறப்புற நிறைவுற்றது. சிறப்பாக அமைந்த நிகழ்ச்சிக்கு தலைவர் ரமேஷ், துணைத்தலைவர் அட்வகேட் பட்டாபிராமன், செயலாளர் சந்திரசேகரன் ஆகியோர் தலைமையேற்று வழிநடத்த, இந்நிகழ்ச்சிக்காக திருமதி.சாவித்திரி வேதராமன், திருமதி. மாலதி கோபாலன், திருமதி. ஜெயஸ்ரீ வரதராஜன் உள்ளிட்டோர் குழு ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்கள்

-ஆதிரையன்.

**14ஆம் பக்கத்து கேள்விகளுக்கான விடைகள்**

*1. இந்திரன் 2. சிதம்பரம் 3. சுந்தரர் 4. நாரதர் 5. நர்மதை*
*6. சூரபத்மனின் தங்கை 7. மஹாவீரர் 8. துளசி தாஸர்*
*9. உயிர்களின் தலைவன் 10.திருவானைக்காவல்*

தொகுப்பு : **பரிதி**

## வேதபாரதி - மறைமலைநகர் நிகழ்ச்சி

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகர் பகுதியில் வாழுகின்ற அந்தண சமூக மக்கள் ஒன்று கூடி 09.02.2020 அன்று மாலை 2.30 மணி முதல் ஸ்ரீ மஹாசத்சங்க நிகழ்ச்சி மறைமலை நகர் சமூதாய நலகூடத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா விக்ரஹத்திற்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. வக்கீல் ஸ்ரீமன் கிருஷ்ணமூர்த்தி அண்ணா அவர்களும் திருவிடைமருதூர் அருகில் உள்ள கதிராமங்களத்தில் சங்கராபுரம் வேதகிராமம் தீர்மானம் தொடர்பான விபரங்களை சபைக்கு தெரிவித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக வேதபாரதி சார்பாக நம் ஸமுக மக்கள் வாழும் வாழ்க்கை முறை குறித்தும் நம் தேச முன்னேற்றம் குறித்தும் ஸ்ரீ மான் ரமண பாரதி சொற்பொழிவு ஆற்றினார்கள். மறைமலை நகர் பகுதியில் அமையவுள்ள ஞானவாபி குறித்து ஸ்ரீ நாராயணன் விளக்கம் கொடுத்தார்கள். வேதபாரதி சார்பில் ஸ்ரீ ராமசுப்ரமணியன், ஆர்.வெங்கட்ராமன், ஸ்ரீ சந்திர சேகர், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை வெகு விமர்சையாக ஸ்ரீ பிரகாஷ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். மனமார்ந்த நன்றிகள்.



# வியக்க வைக்கும் எண்கள்

கணிதம் என்பது ஒரு ஆழமான கடல். இந்த கணிதத்தின் அடிப்படை அம்சமே ஒன்றிலிருந்து ஒன்பது வரையுள்ள எண்கள்தான். எண்கள் வரிசையில் ஒன்று முதல் 100 வரை விரிவாக பார்ப்போம்.

**எண் 5-ன் சிறப்பு**

1. **சிவனின் முகங்கள் ஐந்து =** சந்யோஜாதம், வாமதேவம், தத்புரும், அகோரம், ஈசானம்
2. **பூத ஸ்தலங்கள் ஐந்து (பஞ்ச பூதக்ஙள்)**
   மண் - காஞ்சிபுரம்
   நீர் - திரு ஆனைக்கா
   தீ = தீருவண்ணாமலை
   காற்று = திருகாளத்தி
   வான் = சிதம்பரம்
3. **சபைகள் ஐந்து (பஞ்ச சபைகள்)**
   இரத்தின சபை = திருவாலங்காடு
   பொற்சபை = சிதம்பரம்
   வெள்யிம்பலம் = மதுரை
   தாமிர சபை = திருநெல்வேலி
   சித்திர சபை = திருக்குற்றாலம்
4. **தாண்டவ ஸ்தலங்கள் (பஞ்சதாண்டவ ஸ்தலங்கள்)**
   ஆனநத் தாண்டவம் = தில்லை, பேரூர்
   அஜபா தாண்டவம் = திருவாரூர்
   சுந்தர தாண்டவம் = திருவாலவாய் (மதுரை)
   ஊர்துவ தாண்டவம் = திருவாலங்காடு
   பிரம்ம தாண்டவம் = திருமுருகன் பூண்டி
5. **யக்ஞங்கள் ஐந்து (பஞ்சயக்ஞம்)**
   தேவயக்ஞம் = ஹோமம், பூஜை
   பித்ருயக்ஞம் = சிரார்த்தம், தர்பணம்
   பிரம்மயக்ஞம் = வேதம் ஓதுதல்
   மனுஷயக்ஞம் = அதிதி உபசாரம்
   பூதயக்ஞம் = காக்கை முதிலிய பிராணிகளுக்கு உணவளித்தல்.

**5**ன் சிறப்பு அடுத்த மாதமும் தொடரும்.

தொகுப்பு : **ஆதித்யன்**

# காரடையார் நோன்பு



மாசி மாதம் முடியும் நேரம் பங்குனி மாதம் தொடங்கும் நேரம் செய்யும் நோன்பு தான் **"ஸாவித்திரீ நோன்பு"** 'ஸாவித்திரீ எமனிடமிருந்து தன் கணவன் சத்யவானை மீட்ட தினம் சுமங்கலிகள் மட்டுமல்லாமல் 1 வயதுக்கு மேல் உள்ள பெண் குழந்தைகளும் நோன்பு நோற்க வேண்டும். நோன்பு நேரத்தை வாத்தியார்கள் மூலம் தெரிந்து கொண்டு மஞ்சள் சரட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும். நோன்பு நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பு குளித்துவிட்டு சுமங்கலிகள் மடிசார் கட்டிக்கொண்டு கார் அரிசி மாவையும் காராமணியையும் சேர்த்து வெல்லம் போட்டு நோன்பு அடை உண்டாக்க வேண்டும். பூஜை அறையை துடைத்து அரிசி மாவில் கோலமிட்டு விளக்கேற்றி விளக்கின்முன் நோன்பு கோலம் போட வேண்டும். அதன் பின் பூஜை அறைக்கு முன் அல்லது காமட்சி அம்மன் படத்திற்கு முன் வீட்டில் எத்தனை பெண்கள் உள்ளார்களோ அத்தனை கோலம் தனித்தனியாக போட வேண்டும். அதன்மேல் நுனி வாழை இலையை வைத்து ஓரத்தில் வெற்றிலை பாக்கு, பழம், பூ கட்டிய மஞ்சள் சரடு, பூ ஆகியவற்றை வைக்க வேண்டும். இலையின் நடுவில் தயாரித்த நோன்பு அடைகளில் இரண்டு அடைகளை வைத்து அதன்மேல் உருகாத வெண்ணையையும் வைக்க வேண்டும். பிறகு எல்லோரும் நோன்பு நோர்க்கும் நல்ல நேரத்தில் இலைக்கு முன் கிழக்கு பார்த்து உட்கார்ந்து அடையை அம்பாளுக்கு நிவேதனம் செய்ய வேண்டும். அப்படி செய்யும் போது கீழ்க்கண்டவாறு ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.



**உருகாத வெண்ணையும் ஓரடையும் வைத்தேன்**

**ஒருக்காலும் என் கணவன் என்னை பிரியாதிருக்க வேண்டும்.**

பிறகு நோன்பு கயிற்றை கழுத்தில் கட்டிக்கொண்டு மற்ற பெண்களும் கட்டிக்கொள்ள வேண்டும். சின்ன குழந்தைகள் இருந்தால் அவர்களை சொல்ல வைத்து அவர்களுக்கும் கட்டிவிட வேண்டும். பிறகு இலையில் வைத்த இரண்டு அடைகளில் ஒன்றை மட்டும் தான் சாப்பிட்டுவிட்டு மற்றொன்றைத் தன் கணவனுக்கு வைத்துவிட்டு அம்பாளை நமஸ்கரித்து விட்டு தன் கணவனையும் நமஸ்கரிக்க வேண்டும். பக்தியுடன் இந்த நோன்பை செய்தால் அந்த பெண்ணும் அவளுடைய கணவனும் ஆரோக்யத்துடன் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள்.

*காரடையார் நோன்பு நாள் : 14.03.2020 சனிக்கிழமை*

*நோன்பு நேரம் காலை 10.45 முதல் 11.30 மணிக்குள்*

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்.**


உ
குருவே சரணம்

**வேதபாரதி**
(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## தர்மத்தின் குரல் வாசகர் கேள்வி பதில் நிகழ்ச்சி

| நாள் : | இடம் : |
|---|---|
| 05.04.2020 ஞாயிறு காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை | ஸ்ரீ கணபதி சச்சிதானந்தா ஆஸ்ரமம் பேபி நகர், வேளச்சேரி |

- **நெறியாளர்: ஸ்ரீ ரமண பாரதி**
- 2.00 மணி முதல் 5.30 மணி வரை
- வேதபாரதி அன்பர்களின் குடும்ப நிகழ்ச்சி
- 2020 செயல்திட்டங்கள்
- 5.45 மணிக்கு சாந்திமந்திரம்.

**மேலும் தொடர்புக்கு : 94434 95950**

# ஒரு ராங் கால் - சிதைந்தது குடும்பம்

இதனை எழுதுவதற்கு எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆனால் இந்தக் கட்டுரையைப் படிக்கும் ஆண்கள், தங்கள் குடும்பத்து பெண்களுக்கு எடுத்துச் சொல்லியும், படிக்கும் பெண்கள், தாங்கள் விழிப்புணர்வுடன் இருப்பதோடு, தங்கள் வீட்டுப் பெண்கள், பெண் குழந்தைகள், பெண் சிநேகிதிகள் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது யாருக்கோ நடந்தது, நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்று அலட்சியமாக கடந்து சென்று விடாதீர்கள். இன்று நம்மைச் சுற்றிய உலகம் ஆபத்தாக இருக்கிறது நாம் தான் சிறு விஷயமாக இருந்தாலும் அதீத முன்னேச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

நான் சமீபத்தில் நேரடியாகவே கேட்டு மிகுந்த வேதனையடைந்த விஷயம் இது.

அந்த நபருக்கு 35 வயதிருக்கலாம், படித்தவராகவும், உலக விஷய ஞானம் உடையவராகவும் தெரிந்தார். பரஸ்பர அறிமுகத்திற்குப் பிறகு, அவர் மிகுந்த கோபத்துடன் பேச ஆரம்பித்தார். போகப் போகப் புரிந்து கொண்டேன். அவர் கோபமாகப் பேசவில்லை. குருதி கொட்டும் இதயத்தின் வேதனை தாங்காமல் படபடப்பாகப் பேசுகிறார் என்று.

'ஒரே ஒரு ராங் கால், என் குடும்பம் சிதைந்து சின்னாபின்னமாகி விட்டது" என்றார். அவரின் சிவந்த முகம் ரத்தச் சிவப்பாகியிருந்ததை கவனித்தேன். அவரே தொடர்ந்தார் ''உங்களால் முடிந்தால் பெண்களுக்குச் சொல்லிப் புரியவையுங்கள் ஓரிரு பெண்களாவது புரிந்துகொண்டு நடந்து கொண்டார் அதுவே போதும்'' என்றார். ''கண்டிப்பாக முயற்சிசெய்கிறேன்" என்று நான் சொன்னதை செவிமடுத்தாரா என்று எனக்குப் புரியவில்லை, ஆனால் தொடர்ந்தார்.

''பத்துவருட தாம்பத்தியம் அன்யோன்யமாகத்தான் போய்க்கொண்டிருந்தது. ஒரு பெண்குழந்தையும், ஒரு ஆண்குழந்தையும் பிறந்தார்கள். அவர்களின் எதிர்காலத்திற்க மேலும் நிறைய சம்பாதிக்கலாமே ன்று அயல் நாடு போகட்டுமா என்று என் மனைவியிடம் கேட்ட போதெல்லாம், நீங்கள் இப்போது சம்பாதித்துக் கொடுப்பதே போதும், என்னையும் குழந்தைகளையும் விட்டு தனியாக ஏன் போக வேண்டும்? என்று அன்போடுதான் சொன்னாள். நானும் அதன் படியே குடும்பம் குழந்தைகளுக்காக உழைக்க ஆரம்பித்தேன். குறிப்பாக என் பெண் குழந்தைக்காக என்று சொன்னவர் குரல் தழுதழுக்க அமைதியாகிப் பின் தொடர்ந்தார்.



சில வருடங்களுக்குப் பிறகு தீடிரென்று ஒருநாள், "நீங்கள் ஏன் வெளிநாடு போய் சம்பாதிக்கக் கூடாது"? என்று கேட்டாள். நீதானே இந்த சம்பாத்தியமே போறும், எல்லோறும் சேர்ந்தே இருக்கலாம் என்று சொன்னாய். இப்போது இப்படி சொல்கிறாய் என்று கேட்டேன் என்னை அனுப்புவதில் அவள் தீவிரமாக இருக்கவே, நானும் முயற்சி செய்ய ஆரம்பித்தேன். அதற்காகவும் நிறைய உழைக்க ஆரம்பித்தேன். இதற்கிடையே ஒரு நாள் என் வாடகை வீட்டின் சொந்தக்காரர் என்னை அழைத்து இடியென ஒரு செய்தியைச் சொன்னார். நான் இல்லாத நேரங்களில் என் மனைவியைத் தேடி யார் யாரோ வருகிறார்கள். சரியெனப் படவில்லை என்றுதான் அவரது பேச்சின் சாரம்.

நானே இதை கண்டுபிடிக்கிறேன். அதுவரை நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். என் மனைவிக்கு விலையுயர்ந்த ஒரு கைபேசியை வாங்கிக்கொடுத்து அதில் அவளுக்குத் தெரியாமல் சில செட்டிங்குகளை செய்திருந்தேன். சில நாட்களில் புரிந்துவிட்டது. ஒரு ராங்கால் நபருடன் தவறான தொடர்பு ஏற்பட்டு, அது ஒரு தவறே பல அசிங்கமான தொடர்புகளுக்கு வழிவிட்டு விட்டது என்று என் மனைவியின் உறவுகள் அனைவரையும் ஒரே நாளில் ஒரே இடத்தில் வரவழைத்தேன்.

மனைவிக்கு வாங்கிக்கொடுத்த தொலைபேசியை இயக்கி, எல்லோருக்கும் தெரியப்படுத்தினேன். அவர்கள் செய்வதறியாமல் தவித்தார்கள். அவளது சகோதரன் என் காலில் விழுந்து அழுதான். நான் இறுகிய மனதுடன், "இந்த நிலையில் என் குழந்தைகளை இவளிடம் விட்டுவைப்பது சரியல்ல என்று தோன்றுகிறது. என் குழந்தைகளை என்னிடம் கொடுத்துவிட்டு, அவள் விருப்பப்படி வாழட்டும் குழந்தைகளை என்னிடம் கொடுத்துவிட்டு இவளை நீங்கள் அழைத்துப் போய்விடுங்கள்" என்று கூறி விட்டேன்.

இப்போது சில வருடங்கள் ஆகிவிட்டது மேடம். இன்னும் என் மனதில் அவளுடனான காலங்கள் இருந்துகொண்டுதான் இருக்கிறது. நிறைய சிரமங்களை நான் அனுபவித்துக் கொண்டுதானிருக்கிறேன். அயல்நாடு போய் கொஞ்சம் சம்பாதித்து வந்தேன். ஆனால் குழந்தைகளை விட்டு இருக்கப் பிடிக்கவில்லை. யோசித்து, மூன்று குழந்தைகளுடன் இருந்த வேறு ஒரு பெண்ணை மணந்துகொண்டு, இன்று ஐந்து குழந்தைகளின் எதிர்காலத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கிறேன். "ஒரே ஒரு ராங்கால் மேடம். அதில் சறுக்கி விழுந்தவள் மீளவே முடியாமல் இன்னமும் சகதில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். பெண்களை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்கள் மேடம். சிறு தூண்டிலில் சிக்கி சின்னாபின்னமாகி விடுகிறார்கள்" என்றவரின் கண்கள் மிகவும் கலங்கி இருந்தது.

எல்லா பெண்களும் அவர் மனைவி போல் இருக்க மாட்டார்கள் என்று அவருக்குப் புரியவைத்தாலும், சின்ன சலனம் பெரும் பள்ளத்தில் தள்ளிவிடும் என்று பெண்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று தோன்றியது. அவர் சொன்ன வெளிப்படையான விஷயங்களை தவிர்த்து, நாசூக்காக புரியவைக்க முயன்றுள்ளேன். ஜாக்கிரதையாக இருங்கள் பெண்களே, மன சலனத்திற்கு இடம் கொடுத்து விடாதீர்கள்.

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**




உ

ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,
பேபி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

## ஸந்த்யா வந்தன பயிலரங்கம்

**நாள்: 1, 2, 3, மே 2020 வெள்ளி, சனி, ஞாயிறு**

**இடம்: பாண்டிச்சேரி**

1. உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம்.
2. 30.04.2020 வியாழன் இரவுக்குள் பாண்டிச்சேரி வர வேண்டும்.
3. முன்பதிவு அவசியம்.
4. தங்குமிடம், உணவு, பாதுகாப்பு ஏற்பாடு உண்டு.
5. மூன்று நாட்களும் தங்க வேண்டும்.
6. எல்லா ஸாகைகளுக்கும் ஆசிரியர்கள் உண்டு.
7. ஸ்மார்த்த, வைஷ்ணவ, மாத்வ, சிவாச்சார்யர் எல்லா ஸம்ப்ரதாயங்களுக்கும் வகுப்புகள் உண்டு.
8. தினசரி ஸந்த்யா வந்தனம், ஸமிதாதானம், உடற்பயிற்சி, யோகா, ஆன்மீகப் பெரியவர்களின் ஆசியுறை, பஜன்
9. கலந்து கொள்ளும் ப்ரம்மசாரி குழந்தைகளுக்கு போக்குவரத்து செலவு ஏற்றுக்கொள்ளப்படும்.
10. தங்களுக்கு தேவையான வஸ்திரம், பஞ்சபாத்ரம், தாம்பாளம் கொண்டு வர வேண்டும்.

**Team Members :**

**Er. Ramesh - 73975 46333**

**Sri. Pattabi - 98426 07476**

முன்பதிவு செய்துகொள்ள

**94434 95950 - 98426 07476 - 73975 46333**

**Email : vedabharathichennai@gmail.com**

Aagna®
Counselor's Corner
Counselling & Wellness Services
Seek help ! let us make a better society !
ஆக்ஞா மனநல ஆலோசனை மையம்
No. 13/26, 2nd Floor, Railway Border Road,
Vedantham Colony, Tambaram Sanatorium, Chennai - 600047.

SERVICES WE PROVIDE
- School / Academic Counselling
- Health Counselling
- Career Counselling
- Corporate Counselling
- Marital / Family Counselling

V. BHARATHI, M.Sc., (Applied Psychology) Dip.in Counselling
Counselling Psychologist
Counsellor, Sushaanthi Seva Charitable Trust - NGO
For Appointment: 94448 08799
Timing : 9.30 a.m. to 1.00 p.m. Evening 6.00 p.m. to 8.00 p.m.


## ஆக்ஞா
### மனநல ஆலோசனை மையம்

- பள்ளி மாணவர்களுக்காக கல்வியாளர்களளுக்காக குடும்ப உறவுக்காக நிறுவனங்களுக்காக பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு வழிகாட்டுதல் ஆலோசனை கூடுதல் தேர்தல் உதவுதல் பயமின்றி தேர்வு எழுதல் சரியான துறையை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றிற்கு வழி காட்டப்படும்.
- குடும்ப உறவுகள் மேம்பட தனித்தனியாக மனநல ஆலோசனை வழங்கப்படும் மென்பொருள் நிறுவனங்கள் கார்ப்பரேட் நிறுவனங்கள் மன உளைச்சல் நீங்க பணி மேம்பட மன அழுத்தம் குறைய பயிற்சி அளிக்கப்படும். ஆலோசனை வழங்கப்படும்
- **நேரம் : மாலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை**
- **முன்பதிவு அவசியம்**




G. SIVAGAMASUNDARI
99940 89133

N. GURUMURTHY
99940 89140

SRI SASTHA CATERING

We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order

14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.


## திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

*செல்:* **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **08.03.2020 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 04.04.2020 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## திருக்கோயில் உழவாரப்பணி

**உழவாரப்பணி** வரும் **02.02.2020** ஞாயிறு காலை **திருமால்பூர் அருள்மிகு அஞ்சனாட்சி அம்பாள்** உடனுறை **மணிகண்டேஸ்வரர் திருக்கோயில்**